பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
19 09 2024 6 45
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- மத்திய அரசு ஊழியர்களுக்கான ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைப்பதை உறுதி செய்துள்ளதாக மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
- ஸ்டார்ட்-அப், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், தனி நபர்களின் கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை பதிவுக் கட்டணம் 80 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.
- சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கும், தொழில் வளர்ச்சிக்கும் அடித்தளமாக திகழ்வதாக அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு தா மோ அன்பரசன் தெரிவித்துள்ளார்.
- பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராக தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொண்டுள்ளது.
- இந்தியா – பங்ளாதேஷ் அணிக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சென்னையில் இன்று தொடங்குகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

தேசிய ஓய்வூதியத் திட்டமான என் பி எஸ் வாத்சல்யா திட்டத்தை மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நேற்று புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், சமீபத்தில் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்த மத்திய அரசு ஊழியர்களுக்கான ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஒன்றாம் தேதி முதல் அமலுக்கு வரும் என்று கூறினார்.

பழைய ஓய்வூதியத் திட்டம் மற்றும் புதிய ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றில் உள்ள நல்ல அம்சங்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், இதனால் மத்திய அரசு ஊழியர்கள் ஓய்வுபெற்ற பின்னர் அவர்களுக்கு உறுதியான ஓய்வூதியம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குழந்தைகளின் பெயரில் கணக்கு தொடங்கி அதில் பெற்றோர்கள் முதலீடு செய்து வருவதன் மூலமாக அக்குழந்தைகளின் எதிர்காலமும் உறுதிப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குழந்தைகளின் பெயரில் ஆண்டுக்கு குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாய் முதலீடு செய்வது உள்ளிட்ட அம்சங்கள் இந்த திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய நிதித்துறை இணை அமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி வாத்சல்யா திட்டம் சமூக பாதுகாப்பையும், சமூகத்தில் தன்னிறைவையும் அளிப்பதாகக் கூறினார்.

இந்த திட்டத்திற்கான தொடக்க நிகழ்ச்சி நாடு முழுவதும் 75 இடங்களில் காணொலி வாயிலாக நடைபெற்றது.

நெல்லை மாவட்டம் களக்காட்டில் பள்ளி ஒன்றில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற நபார்டு வங்கியின் வளர்ச்சி அதிகாரி திரு சசிக்குமார், வாத்சல்யா திட்டம் குழந்தைகளின் எதிர்காலத்திற்கு உதவும் என்று கூறினார்.

*( சவுண்ட்பைட் - சசிக்குமார் ) ---55 செகண்ட்*

**[]<<<>>>[]**

ஸ்டார்ட்-அப், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், மகளிர் தொழில் முனைவோர், கல்வி நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களின் கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை பதிவுக் கட்டணம் 80 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செயற்கை நுண்ணறிவு தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உலகில் அதிகமான வணிக சின்னங்களைக் கொண்டுள்ள மூன்றாவது பெரிய நாடு இந்தியா என்று கூறினார்.

வர்த்தக சின்னங்களை பதிவு செய்யும் நடைமுறைகளை மத்திய அரசு எளிமைப்படுத்தி உள்ளதால் நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் விரைந்து பைசல் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கான நடைமுறைகள் அனைத்தும் ஆன்லைன் வாயிலாக நடைபெறுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் எளிதாக வணிகம் செய்வதற்கான நடைமுறைகளை வலுப்படுத்த தொழில் முனைவோர் தங்களது கருத்துக்களை அரசுக்கு தெரிவிக்க வேண்டுமென்றும் திரு பியூஷ் கோயல் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

நாடு பசுமை தொழில்நுட்பத்தில் முன்னேறுவதற்கும், பொருளாதார ரீதியாக வலுவடைவதற்கும் மின்சார வாகனங்கள் விரைந்து உற்பத்தி செய்வது அவசியம் என்று மத்திய கனரக தொழில்கள் துறை அமைச்சர் திரு எச் டி குமாரசாமி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இந்தியாவில் மின்சார வாகனங்களின் எதிர்காலம் தொடர்பான கருத்தரங்கில் பேசிய அவர், கரியமிலவாயு வெளியேற்றத்தை குறைப்பதற்காக மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை எடுத்துரைத்தார்.

அதன் ஒரு பகுதியாக மோட்டார் வாகனங்களை உற்பத்தி செய்வோர் விரைவாக மின்சாரத்தில் இயங்கும் வாகன உற்பத்திக்கு மாறுவதற்கு மத்திய அரசு உதவி செய்து வருவதாகவும் அவர் கூறினார்.

உலகில் மின்சார வாகனங்களை உற்பத்தி செய்வதில் இந்தியா முதன்மையான இடத்தை அடைவதற்கான வலுவான அடித்தளத்திற்கான முன் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது என்றும் திரு குமாரசாமி தெரிவித்தார்.

[]<<<>>>[]

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கும், தொழில் வளர்ச்சிக்கும் அடித்தளமாக திகழ்வதாக அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு தா மோ அன்பரசன் தெரிவித்துள்ளார்.

இந்திய வர்த்தக மற்றும் தொழில் சபையான அசோச்சேம் சார்பில் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி மாநாட்டை நேற்று சென்னையில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்நிறுவனங்களே நாட்டின் ஏற்றுமதியில் 42 சதவீத பங்களிப்பை வழங்குவதாகவும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30 சதவீத பங்களிப்பை கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

தமிழகத்தில் 26 லட்சத்து 61 ஆயிரம் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, அதன் மூலம் இரண்டு கோடிக்கும் அதிகமானோருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்த காஞ்சிபுரம் மாவட்டம் திருமுடிவாக்கத்தில் சுமார் 47 கோடி ரூபாய் செலவில் தரத்தினை பரிசோதிக்கும் உயர் தொழில்நுட்ப பரிசோதனைக் கூடம் விரைவில் தொடங்கி வைக்கப்படும் என்றும் திரு தா மோ அன்பரசன் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்திருப்பது கவலை அளிப்பதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு கே பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

விழுப்புரத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர். பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராக மாநில அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

மதுவிலக்கு என்பது அனைத்து அரசியல் கட்சிகளின் கொள்கையாக இருந்தாலும், மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுவதாக திரு பாலகிருஷ்ணன் கூறினார்.

**[]<<<>>>[]**

பாலஸ்தீனத்திலிருந்து இஸ்ரேல் படைகள் உடனடியாக வெளியேற வேண்டுமென்று ஐ நா சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இலங்கையில் அதிபர் தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று நள்ளிவுடன் நிறைவடைந்தது.

**[]<<<>>>[]**

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்று வரும் சர்வதேச சுற்றுலா வர்த்தக கண்காட்சியில் தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் அரங்கை பிரான்ஸ் நாட்டிற்கான இந்திய தூதர் திரு ஜாவத் அஷ்ரப் திறந்து வைத்தார்.

[]<<<>>>[]

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரும் வகையில் திவ்யகலா திருவிழாவை மத்திய அமைச்சர் திரு வீரேந்திரகுமார் இன்று விசாகப்பட்டினத்தில் தொடங்கி வைக்கிறார்.

[]<<<>>>[]

தில்லி கரோல்பாக் பகுதியில் நேற்று இரவு பழமையான கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்த விபத்தில் நான்கு பேர் உயிரிழந்தனர். 14-பேர்காயமடைந்தனர்.

[]<<<>>>[]

கன்னியாகுமரி மாவட்டம் திரிவேணி சங்கம கடற்கரைப் பகுதியை உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் ஆட்சியர் திருமதி அழகுமீனா நேற்று ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் ஆட்சியர் திருமதி உமா பல்துறை அலுவலகர்களுடன் ஆய்வு நடத்தினார்.

[]<<<>>>[]

விழுப்புரம் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே 86 கோடி ரூபாய் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள அணையை மாநில அரசின் திட்ட வளர்ச்சித்துறையின் முதன்மை செயலர் ஹர்ஷஹாய் மீனா நேரில் பார்வையிட்டார்.

[]<<<>>>[]

மழைக்காலம் தொடங்க உள்ளதை அடுத்து ராணிப்பேட்டை மாவட்டத்தில் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால்களை தூய்மைப்படுத்த வேண்டுமென்று ஆட்சியர் திருமதி சந்திரகலா கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கல்வராயன் மலையில் வன உரிமைச் சான்று பெற்ற விவசாயிகள் பி எம் கிசான் திட்டத்தில் பயன்பெறலாம் என்று ஆட்சியர் திரு எம் எஸ் பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

சென்னை மாநகராட்சி வார்டு 74-க்கு உட்பட்ட பகுதிகளுக்கான சபைக் கூட்டம் மேயர் திருமதி பிரியா தலைமையில் நேற்று நடைபெற்றது.

[]<<<>>>[]

இந்தியா – பங்ளாதேஷ் அணிக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சென்னையில் இன்று தொடங்குகிறது.

இந்திய அணியின் பயிற்சியாளராக கௌதம் கம்பீர் பொறுப்பேற்ற பின்னர் இந்திய அணி எதிர்கொள்ளும் முதல் டெஸ்ட் தொடர் இதுவாகும்.

[]<<<>>>[]

பூட்டானில் நடைபெறவுள்ள 17 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து போட்டியில் பங்கேற்கும் இந்திய அணி திம்பு சென்றடைந்தது.

[]<<<>>>[]

தென்னிந்திய அளவில் சி பி எஸ் இ பள்ளிகளுக்கான மகளிர் கால்பந்து போட்டி நேற்று ஓசூர் அருகே உள்ள மதகொண்டபள்ளியில் தொடங்கியது.

[]<<<>>>[]